இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 343 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 07 – புதன்கிழமை 23 ஜூலை 2025 – சென்னை 44 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 343 : Thiruvalluvar Year - 2056 - Aadi 07 - Wednesday 23 July 2025 - Chennai 44 Pages ₹ 5.00

## “உங்களுடன் ஸ்டாலின்” திட்டப்பணிகள் – முக்கிய அரசுப் பணிகள் குறித்து

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலாளருடன் ஆலோசனை!

## மருத்துவமனையிலிருந்தபடியே மேற்கொண்டார் !

**சென்னை, ஜூலை 23 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று அரசு தலைமைச் செயலாளர் அவர்களுடன் முக்கிய அரசுப்பணிகள் குறித்தும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில்அனுமதிக்கப்பட்டு அங்கு அவர் மூன்று நாட்கள் ஒய்வு மற்றும் மருத்துவக் கண்காணிப்பில் இருந்து வருகிறார்.

மருத்துவமனையில் இருந்தபடியே அவர் அலுவலகப் பணிகளை மேற்கொள்ளலாம் என்று மருத்துவர்கள் தெரிவித்ததன் அடிப்படையில் நேற்று (22.7.2025) அவர் அரசு தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், அவர்களுடன் அரசுப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

கடந்த 15.7.2025 தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வரும் “உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்தின் பணிகளின் முன்னேற்றம் குறித்து முதலமைச்சர் அவர்கள் கேட்டு அறிந்தார்.

நேற்றைய தேதி வரை இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 5,74,614 மனுக்கள் வரப்



பெற்றுள்ளன. இதில் எத்தனை மனுக்களுக்கு தீர்வுகள் காணப்பட்டுள்ளன, பெறப்பட்ட மனுக்கள் அனைத்தும் உரிய துறைகள் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றனவா போன்ற விவரங்களை கேட்டறிந்த முதலமைச்சர் அவர்கள், தொடர்ந்து இந்த முகாம்கள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி நடத்தப்பட வேண்டும் என்றும், முகாம்களுக்கு மனுக்களை அளிக்க வரும் மக்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுத்தல் குறித்தும் அறிவுரை வழங்கினார்.

மேலும், பெறப்படும் மனுக்களின் மீது குறிப்பிட்ட காலத்திற்குள் எவ்வித தொய்வுமின்றி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

## மருத்துவமனையில் இருந்து அரசுப் பணி தொடர்கிறேன்!

சென்னை, ஜூலை 23 -

மருத்துவமனையில் இருந்தபடியே அரசுப் பணிகளை மேற்கொள்வது குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**மருத்துவமனையில் இருந்தபடியே அரசுப் பணிகளைத் தொடர்கிறேன்.**

**“உங்களுடன் ஸ்டாலின்” முகாம்கள் திட்டமிட்டபடி நடைபெறுகிறதா, நேற்றுவரையில் பெறப்பட்ட மனுக்கள் எத்தனை - தீர்வுகாணப்பட்டவை எத்தனை என்பன உள்ளிட்ட விவரங்களைத் தலைமைச் செயலாளரிடம் கேட்டறிந்து, மக்களின் மனுக்கள் மீது தீர்வு காண்பதில் எந்தவிதமான தொய்வும் ஏற்படக் கூடாது என அறிவுறுத்தியுள்ளேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.7.2025) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் 2024 – 2025 ஆம் கல்வியாண்டில் சர்வதேச, தேசிய, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவ, மாணவிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

### 2024 - 2025 ஆம் கல்வியாண்டில் நடைபெற்ற சர்வதேச, தேசிய, மாநில அளவிலான

## விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்!

### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜூலை 23 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.7.2025) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் 2024 - 2025ஆம் கல்வியாண்டில் சர்வதேச, தேசிய, மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளைச் சார்ந்த மாணவ. மாணவிகளுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். மேலும், இவ்விழாவில் மாணவர்களின் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதை நோக்கமாக கொண்ட உடற்கல்வி ஆசிரியர் வளநூல் எனும் புத்தகத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.**

தமிழ்நாடு அரசின் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் குறுவட்டம், மாவட்டம், மாநில அளவில் மாணவ, மாணவிகளுக்கு 14, 17, 19 வயதிற்குட்பட்ட பிரிவுகளில் ஆண்டுதோறும் மொத்தம் 26 வகையான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் இந்திய பள்ளிகள் விளையாட்டுக் குழுமம் நடத்தும் தேசிய அளவிலான 46 வகையான விளையாட்டுப் போட்டிகளிலும் அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளைச் சார்ந்த மாணவர்கள் பங்கேற்று வெற்றி பெற்று சாதனை புரிந்து வருகிறார்கள்.

2024 - 2025 ஆம் கல்வியாண்டில் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளை சார்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்று 76 தங்கம், 26 வெள்ளி, 24 வெண்கல பதக்கங்கள் என மொத்தம் 126 பதக்கங்களை வென்றுள்ளனர்.

தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளை சார்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்று 348 தங்கம், 236 வெள்ளி, 333 வெண்கல பதக்கங்கள் என மொத்தம் 917 பதக்கங்களை வென்றுள்ளனர்.

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகளை சார்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்று 1,484 தங்கம், 1,522 வெள்ளி, 1,739 வெண்கல பதக்கங்கள் என மொத்தம் 4,745 பதக்கங்களை வென்றுள்ளனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.7.2025) சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற பாராட்டுச் சான்றிதழ் வழங்கும் விழாவில் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த, சர்வதேச, தேசிய, மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்று பதக்கங்கள் வென்ற அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளின் மொத்தம் 5,788 மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி, மாநில பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் பி.வி.பி.முத்துக்குமார், பள்ளிக் கல்வி இயக்கக இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர் பெ.குப்புசாமி, தொடக்கக் கல்வி இயக்குநர் முனைவர் பூ.ஆ.நரேஷ் உள்பட அரசு அலுவலர்கள், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## பஹல்காம் – வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம்: நாடாளுமன்ற இரு அவைகளிலும்

# அனைத்து எதிர்க்கட்சிகளும் கடும் எதிர்ப்பு!

### நாடாளுமன்ற வளாகத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்!

*புதுடெல்லி, ஜூலை 23 -*

*நாடாளுமன்ற மழைக் கால கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் நாளிலேயே பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் மற்றும் பஹல்காம் தீவிர தாக்குதல் உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து விவாதிக்க அனுமதி கோரி எதிர்க் கட்சிகள் வலியுறுத்தின. ஆனால், அனுமதி மறுக்கப்பட்டது. இதனையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனால், நேற்று முன்தினம் இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்தி வைக்கப்பட்டு, பின்னர் நாள் முழுவதும் ஒத்தி வைக்கப்பட்டன.*

*இந்நிலையில், 2வது நாளான நேற்று வாக்காளர் பட்டியல் புதிய விதிமுறைகள் குறித்து விவாதிக்கக் கோரி மக்களவையில் டி.ஆர்.பாலு ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் அளித்தார். மக்களவை கூடியதும் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் மற்றும் பஹல்காம் விவகாரம் தொடர்பாக விவாதிக்க அனுமதி கோரி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முழக்கம் எழுப்பினர். இதனால் மக்களவையில் நேற்றும் கடும் அமளி ஏற்பட்டது. இதனையடுத்து, தொடங்கிய சில நிமிடங்களிலேயே மக்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.*

**மாநிலங்களவை**

*கீழடி விவகாரம் குறித்து மாநிலங்களவையில் விவாதம் நடத்த வேண்டும் என்று கோரி, தி.மு.க. சார்பில் இரண்டாவது முறையாக நோட்டீஸ் அளிக்கப்பட்டது. தி.மு.க. மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா அளித்துள்ள நோட்டீசில், மாநிலங்களவை அலுவல்களை ஒத்தி வைத்து, கீழடி விவகாரம் குறித்து விவாதம் நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.*

*இந்நிலையில், மாநிலங்களவையிலும் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் மற்றும் பஹல்காம் விவகாரம் தொடர்பாக குரல் எழுப்பப்பட்டது. இதனால் அங்கும் கடும் அமளி ஏற்பட்டது. மாநிலங்களவையும், தொடங்கிய சில நிமிடங்களிலேயே நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் மீண்டும் அவை கூடியபோதும் அமளி நீடித்ததால் பிற்பகல் 2 மணி வரை மாநிலங்களவை ஒத்தி வைக்கப்பட்டது.*

*இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த அனைத்து எம்.பி.க்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, பஹல்காம் தீவிரவாத தாக்குதல் மற்றும் பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் குறித்து விவாதிக்க அனுமதி மறுத்த ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு கண்டனம் தெரிவித்து முழக்கங்களை எழுப்பினர்.*

*மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி, மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ் யாதவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினர். தமிழிலும் முழக்கம் எழுப்பப்பட்டது.*

